Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**CC.No. 22/2023**

**Deposition of PW.5**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சாலமன் | ஜாதி | : |
| த/பெ | : கஸ்பார் | தொழில் | : EB போர்மேன் |
| கிராமம் | : NGO காலனி திண்டுக்கல் | சமயம் | : |
| தாலுகா | :திண்டுககல் மேற்கு | வயது | : 61 /2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20.09.2024.

(Accused A1, A2 present)

முதல் விசாரணை

நான் திண்டுக்கல் NGO காலனியில் குடியிருந்துகொண்டு கன்னிவாடி EB ல் பணியாற்றி ஓய்வு பெற்றுவிட்டேன். இவ்வழக்கு இச்சம்பவம் நடைபெற்றபோது கன்னிவாடி EB ல் போர்மேனாக பணியாற்றி வந்தேன். 01.07.2021 அன்று AE சொன்னதன் பெயரில டிராஷ்பார்மரை பார்பபதற்காக சென்றிருந்தோம். அப்போது கன்னிவாடி காவல்நிலையத்திலிருந்து சார்பு ஆய்வாளர் அங்கு வந்திருந்தார். அங்கு விசாரணை செய்து படம் வரைந்தார். என்னிடம் சாட்சிக்காக கையொப்பம் போடச்சொன்னார். நான் சாட்சி கையொப்பம் போட்டு கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் எனது கையொப்பம் இல்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பில்குறுக்கு விசாரணை

இந்த வழக்கை பற்றி நேரடியாக எந்த விபரமும் தெரியாது. சார்பு ஆய்வாளர் அங்கு வந்தபோது நானும், பெரியசாமி என்பவரும் அங்கு இருந்தோம். நான் கையொப்பம் செய்த பேப்பர் நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படவில்லை. நான் முதல் விசாரணையில் சொன்னதைபோல் சார்பு ஆய்வாளரோ மற்ற போலீசாரோ அங்கு வரவில்லை என்று சொன்னால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் காட்டப்படும் கையொப்பம் என்னுடையது இல்லை என்றால் சரிதான். இவ்வழக்கின் அ.சா 1 எனது உயர்அதிகாரி என்பதால் அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க போலீசார் விசாரணைக்கு வந்தததாகவும் பார்வை மகஜரில் சாட்சி கையொப்பம் செய்ததாக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**Sd/.P.Jaisankar**

District Munsif Cum Judicial Magistrate,
Athoor.